வளம் பெருகுக.

1.உழவுத் தொழில் பற்றித் தகடூர் யாத்திரை கூறுவன யாவை?

- சேரனின் நாட்டில் பெருகிய மழைநீரால் வருவாய் சிறந்து விளங்குகிறது. அகலமான நிலப்பகுதியில் விதைகள் குறைவின்றி முளை விடுகின்றன.
- முளைத்த விதைகள் செழிப்புடன் வளரத் தட்டுப்பாடின்றி மழை பொழிகின்றது.
- தகுந்த காலத்தில் மழை பொழிவதால் பயிர்கள் வாட்டம் இன்றிக் கிளைத்து வளர்கிறது. செழித்த பயிர்கள் பால் முற்றிக் கதிர்களைப் பெற்றிருக்கின்றன.
- அக்கதிர்கள் அறுவடை செய்யப் பெற்று ஏரினால் வளம் சிறக்கும் செல்வர்களின் களத்தில் நெற்போர் காவல் இல்லாமலே இருக்கின்றது.
- நெற்போரினை அடித்து நெல்லினைக் கொள்ளும் (எடுக்கும்) காலத்தில் உழவர்கள் எழுப்பும் ஆரவார ஒலியால் நாரை இனங்கள் அஞ்சித் தம் பெண் பறவைகளோடு பிரிந்து செல்லும் சிறப்புடைய, சேர மன்னரின் அகன்ற பெரிய நாடு புது வருவாயுடன் சிறந்து விளங்குகின்றது.

2.தகடூர் யாத்திரை நூல் குறிப்பு வரைக.

- ஆசிரியர் பெயரை அறிய முடியவில்லை.
- தகடூர் இன்று தர்மபுரி என்று அழைக்கப்படுகிறது.
- இந்நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை.
- இந்நூலின் சில பாடல்கள் புறத்திரட்டு என்னும் தொகுப்பு நூலில் கிடைக்கின்றன.